பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**

*A Peer-Reviewed Journal*

**Volume 1, Special Issue 1, January 2022** **E-ISSN: 2583-0880**

# Ayya Vaikundar's Social Revolution for Equality (Samadharma)

**Dr N. Punithalakshmi,** Assistant.Professor, Department of Tamil, A.D.M. College for Women, Nagapattinam, Tamil Nadu, India.

**ORCiD: http://orcid.org/0000-0002-9384-520X**

**DOI:** 10.5281/zenodo.6433164

## Abstract

*Inequalities were largely due to caste religion in our earlier society. Thus, the people suffered greatly. This is Kali. 'Kali is the filth in the mind. To conquer this Kali, on the twentieth day of February in 1008, Lord Vishnu incarnated as Vaikuntha. The oppressed people were even denied entry into the large temples built for deities like Shiva, Vishnu, etc. The temple should not even go through the streets and distant boundaries were defined to speak to the upper castes. Those who went beyond the limits were cut down. The commoners were destined to serve without pay. It was forbidden to draw water, use umbrellas, shoes, etc. In public wells, the poor could not fight the ruling class and the deceitful whites. The Lord was compelled to defend the downtrodden and save this society. So, Mahavishnu made his aspect Vaikundara, born on earth. Formerly incarnated in the womb of the mother, the physical son grew up and the one who lived in the world went into the sea and returned as an aspect of Mahavishnu. His incarnation characterised the human reform of people divided by caste. The social revolution started with the birth of Ayya Vaikundar. For the Pandavas in the last age, the born Mayan later emerged as Vaikundara for the cruel witnesses of Kali. Ayya appeared at a place called Swamithoppu in Kanyakumari district. The Swati Maharaja ruled the princely state of Travancore. Maharaja Ayya considered Vaikundar as his enemy. So Vaikundara paid tribute to me and asked Ayya if Sami would come and be born in the Santror clan who do ministries. They threw the starving tiger on Ayya. But nothing could get close to Ayya. Ayya Vaikundar is the union of Saiva and Vaishnavism in justice and philosophy. Vishnu is the body and Shiva is the life. Ayya is the united incarnation of these two idols. He initiated a revolution by creating a separate system of worship for people who were forbidden to enter the temple on the grounds that they were oppressed people. He created for them a "wedding greeting" and a "seal well", which is a sacred fountain. He introduced Tamil Mantras like 'Ukappadippu', 'Uchippadippu'. He said not to give tax on anyone and live as a slave .Love is the basis for attaining God, so do not sacrifice your life. Thus, this article lets to know Ayya Vaikundar's Samadharma Social Revolution, who brought about change in society from time to time for the people.*

**Keywords:** Ayya Vaikundar, Avatar, Swami Thoopu, Akilathirattu.

## References

[1] N. Vivekanandan. *Ayya Vaikundar Akilathiruttu Ammanai*, Vivekananda Publishing House, Nagercoil.
[2] Na.Vivekanandan. *Arul Nool Mulamum Uraium*. Vivekananda Publishing House, Nagercoil.
[3] V. Neelakandan. *Ayya Vaigundar*. Vikadan Prasuram, 2009.
[4] Maruthi Priyan. *Anmeega Markkam*. Siva offset, Thiruvithangodu.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

# அய்யா வைகுண்டரின் சமதர்ம சமூகப் புரட்சி

**முனைவர் ந. புனிதலெட்சுமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அ.து.ம மகளிர் கல்லூரி, நாகப்பட்டினம்.
ORCiD: http://orcid.org/0000-0002-9384-520X
DOI:

**ஆய்வுச்சுருக்கம்**

நம்முடைய முந்தைய சமுதாயத்தில் ஜாதி மதத்தால் ஏற்றத்தாழ்வுகள் பெருமளவில் இருந்து வந்தது. இதனால் மக்கள் மிகவும் துன்பம் அடைந்தனர். இதுவே கலி.' கலி என்பது மனதில் படிந்திருக்கும் அழுக்கு. இந்தக் கலியை வெல்வதற்கு, 1008 கொல்லம் ஆண்டில் மாசி மாதம் இருபதாம் நாள் மகாவிஷ்ணு, மனுநிறம் காட்டி வைகுண்டமாக அவதரித்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்களுக்கு கட்டப்பட்ட பெரிய கோயில்களுக்குள் நுழையக் கூட அனுமதி மறுக்கப்பட்டது. கோயில் தெருக்ககளில் கூட செல்லக்கூடாது, மேல் சாதியினரிடம் பேசுவதற்கு தூரஎல்லைகள் வரையறுக்கப்பட்டது. வரையறைகளை மீறி சென்றவர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டனர். எளியவர்கள் ஊதியம் இல்லாமல் ஊழியம் செய்ய விதிக்கப்பட்டர். பொதுக்கிணறுகளில் தண்ணீர் எடுக்கவும், குடை, செருப்பு பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டது. ஏழை மக்களால் ஆதிக்க வர்க்கத்தினர்களையும் வஞ்சக வெள்ளையர்களையும் எதிர்த்துப் போராட முடியவில்லை. தாழக்கிடந்த மக்களை தற்காத்து இந்த சமுதாயத்தை மீட்டு காக்க வேண்டிய கட்டாயம் இறைவனுக்கு ஏற்பட்டது. அதனால் மகாவிஷ்ணு தனது அம்சமான வைகுண்டரைப் பூவுலகில் பிறக்க வைத்தார். பூர்வத்தில் தாயின் வயிற்றிலே அவதரித்து, பௌதிக மகனாய் வளர்ந்து, உலகிலே வாழ்ந்தவர் கடலுக்குள் சென்று மகாவிஷ்ணுவின் அம்சமாக திரும்பி வந்தார். அவருடைய அவதாரம் ஜாதியால் பிளவுபட்டுக் கிடந்த மக்களின் மானுட சீர்திருத்தத்திற்கு வகை செய்தது. அய்யா வைகுண்டரின் பிறப்பு முதற்கொண்டே சமூகப் புரட்சி தொடங்கியது. சென்ற யுகத்தில் பாண்டவர்களுக்காகப், பிறந்த மாயன் பின்பு கலியின் கொடுமைக்கு உள்ளான சான்றோர்களுக்காக வைகுண்டராக அவதரித்தார். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுவாமிதோப்பு என்று அழைக்கப்படுகிற இடத்தில் அய்யா தோன்றினார். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் சுவாதி மகாராஜா ஆட்சி செய்து கொண்டிருந்தார். மகாராஜா அய்யா வைகுண்டரை தனக்கு எதிரியாக்கருதினார். எனவே வைகுண்டரை எனக்கு வரி செலுத்தி ஊழியங்கள் செய்யும் சாணான் குலத்தில் சாமி வந்து பிறப்பாரா...... என்று அய்யாவைத் துன்பப்படுத்தினர். பட்டினி போட்ட கடுவாயை அய்யா மீது ஏவினர். அழுக்கு நிறைந்த டாணாப் புரையில் அடைத்தனர். ஆனால் அய்யாவை எதுவும் நெருங்க

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

முடியவில்லை. அய்யா வைகுண்டர் புகட்டிய நீதியும் தத்துவமும்தான் சைவ, வைணவ சங்கமமாகும். "அய்யா சிவ சிவ சிவ சிவ அரகரா அரகரா" என்கிற ஒரே மந்திரத்தை உச்சரித்தார். விஷ்ணுவின் அம்சத்தில் சிவன், சக்தி. விஷ்ணு என்பது உடல், சிவன் என்பது ஜீவன். இந்த இரண்டு மூர்த்திகளின் ஒன்றுபட்ட அவதாரமே அய்யா. எந்த மக்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லி கோயிலுக்குள் செல்ல தடை விதித்தார்களோ, அந்த மக்களுக்கு என்று ஒரு தனி வழிபாட்டு முறையினை உருவாக்கி புரட்சி செய்தார். அவர்களுக்கு "திருமண வாழ்த்து", புனித ஊற்றாக விளங்கும் ''முத்திரி கிணறு", உருவாக்கினார். தமிழ் மந்திரங்கள் உகப்படிப்பு, உச்சிப்படிப்பு, அறிமுகம் செய்தார். அன்புமலர் எடுத்து தினமும் வணங்கினால் போதும், அவரவர் தேடும் பொருளை அவரவர் வைத்து பயன்படுத்துங்கள். வரி என்று யாருக்கும் கொடுத்து அடிமையாக வாழ வேண்டாம் என்றார். இறைவனை அடைவதற்கு அன்பே அடிப்படை எனவே உயிர்ப்பலி வேண்டாம் என்று தடுத்தார். இவ்வாறு மக்களுக்காக சமயத்தில் இருந்துகொண்டே சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய அய்யா வைகுண்டரின் சமதர்ம சமூகப் புரட்சியை தெரிந்துகொண்டு போற்றுவோம் அதன் வழி நடப்போம்.

**கருச்சொற்கள்:** அய்யா வைகுண்டர், சுவாமிதோப்பு, அகிலத்திரட்டு. சமதர்மம், சமூகப்புரட்சி

**முன்னுரை**

**மாசுக் கலியறுத்து மக்களை ஓர் குடைக்குள் ஆள,**
**பாருக்குள் வைகுண்டமாய் தோன்றிய**
**எம்பெருமான் நாராயண மூர்த்தியின் பாதம் பணிந்து......**

சாதிப் பாகுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும், மோசடி மதமாற்றங்களும் இந்தச் சமுதாயத்தைப் பீடித்த பிணிகள். அந்தப் பிணியே கலி. கலி என்பது மனத்தில் பிடித்திருக்கும் அழுக்கு. அந்த அழுக்கை அகற்றுவதற்குத் தான் தெய்வத்தின் அவதாரம் அவசியமாயிற்று.

**"கலி என்பது எலியோ, புலியோ அல்ல"**

ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்களே கலி. அவற்றை ஆயுதங்களைக் கொண்டு அழித்துவிட முடியாது. மனதிற்குகந்த பயிற்சியும், முயற்சியும் இருந்தால் கலியின் கொடுமையிலிருந்து விடுதலை பெறலாம். அன்றைக்கு சான்றோர்கள் அடைந்த கொடுமைகளுக்கெல்லாம் கலி காரணமானது. பூலோகத்தில் நடக்கிற அநியாயங்களை அழிப்பதற்கு இறைவனிடம் முறையிட்டுத் தீர்வு காண்பவர்கள் தேவர்கள். தேவர்கள் எப்போதும் முறையிடுவது போல இப்போதும் மன்றாடினார்கள். அந்த வழக்கத்தின்படி இறைவனின் அவதாரம் திகழ்ந்தது.

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

கலியை வெல்வதற்கு 1008 - ம் கொல்லம் ஆண்டில் மாசி மாதம் 20ஆம் நாள் மகாவிஷ்ணு மனுநிறம் காட்டி வைகுண்டமாக அவதரித்தார். மகாவிஷ்ணு, கருணையின் வடிவமாக பகவான் வைகுண்டராக அவதரித்ததை,

**அறுகரத்தோன் வாழும் ஆழிக் கரையாண்டி**
**நறுகரத்தோன் ஆன நாராயண மூர்த்தி**
**உருவெடுத்து நாமம் உலகமேழும் தழைக்கத்**
**திருவெடுத்தக் கோலம். (அகிலத்திரட்டு, பக். 4)**

என்று அகிலத்திரட்டு கூறுகிறது. தமது அவதாரத்தின் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையிலே வெங்கலியின் பெருங்கொடுமையை நிர்மூலமாக்கினார். மூடநம்பிக்கையிலும், அறியாமையிலும் மூழ்கிக் கிடந்த மக்களை முழுமை நோக்கிய பயணத்திற்கு ஆயத்தப் படுத்திய, வைகுண்டரின் சமூகப்புரட்சியை இக்கட்டுரையில் காண்போம்.

**சமதர்மம், சமூகம் விளக்கம்**

சமதர்மம் என்கின்ற வார்த்தை ஒரு பொது வார்த்தை. இது ஆங்கிலத்தில் உள்ள சோசலிசம் என்னும் வார்த்தைக்கு தமிழ் மொழி பெயர்ப்பாகக் கையாளப்படுகிறது. இங்கு சமதர்மம் என்கின்ற வார்த்தைக்குச் சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், மக்கள் உயர்வு, தாழ்வு இல்லாமல் சமத்துவமாய் வாழவேண்டும் என்பதையே சமதர்மம் என்று கருத்தில் கொண்டு சமதர்மம் என்கின்ற வார்த்தையை இங்கு பிரயோகிக்கின்றோம்.

சமூகம் (Society) என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவைக் குறிக்கும். ஒரே மாதிரியான புவியியல் நிலப்பகுதியில் வாழ்கின்ற ஒரு பெரிய மக்கள் குழுவையும், சமூகம் எனலாம். ஒரே மாதிரியான அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்ட சமூக பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் குழுவையும் சமூகம் எனலாம். மொத்தத்தில் சமூகம் என்பது ஒழுங்கமைக்கப்பட்ட வழியில் வாழும் மனிதர்களின் குழு. இக்குழு மனித இனத்தின் சமூக பொருளாதார அரசியல் ஈடுபாடுகளினால், தொடர்புகளினால் இயங்கி வரும் ஓர் அமைப்பாகும்.

**சான்றோர் மக்கள் பட்ட துயரம்**

கண்ணிருந்தும், குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், வாயிருந்தும் ஊமைகளாய் அக்காலத்து மக்கள் வாழ்ந்து வந்தார்கள். (உழைப்பவன் ஒருவன், அதன் பலனை அனுபவிப்பவன் இன்னொருவனாக இருக்கக் கூடாது. உழைப்பவனே அதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்றார்.) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்கள் எல்லாம் அந்தக் காலத்தில் எட்டப்படாத தெய்வங்களாக இருந்தனர். இந்த தெய்வங்களுக்காகக் கட்டப்பட்ட பெரிய கோயில்களுக்குள் இவர்கள் நுழையக்கூடாது. உதாரணமாக சுசீந்திரம் தாணுமாலையன் கோயிலின் உள்ளே செல்ல அனுமதி

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

மறுக்கப்பட்டச் சான்றோர் மக்கள் கோயிலின் உள்ளே மட்டுமல்ல, கோயில் தெருக்களில் கூட செல்லக்கூடாது.

**தாலிக்கு ஆயம், சருகு முதலாயம்**
**காலிக்கு ஆயம், கம்பு தடிக்காயம்**
**தலமது ஏறும் சான்றோருக்காயம்**
**தூலமுடனரிவாள் தூருவட்டிக்காயம்**
**தாலமதுக்காயம் தரணியிலே வளர்த்த**
**ஆலமரம் வரைக்கும் அதிக இறை வைத்தனனே**
**பனை கேட்டடிப்பான் பதநீர் கேட்டேயடிப்பான்**
**கனமான கற்கண்டு கருப்புக்கட்டி கேட்டடிப்பான்**
**நாருவட்டிக் கோலை நாடோறும் கேட்டடிப்பான்**
**நெடுமட்டை கேட்பான் நெட்டோலை கேட்டடிப்பான்**
**கொடுவாவெனவே கூழ் பதனீர் கேட்டடிப்பான்**
**சில்லுக் கருப்புக்கட்டி சீரகமிட்டே யூற்றி**
**கொல்லைதனில் சான்றோரைக் கொண்டுவா என்றடிப்பான்**
**மீச்சுக் கருப்புக்கட்டி மிளகுபல காரமிட்டு**
**வீச்சுடனே கொண்டு வீட்டில்வா என்றடிப்பான்**
**காலைப் பதனீர் கண்முற்றா நுங்குகளும்**
**மாலைப் பதனீர் வற்றக்காயும் பதனீர்**
**கொதிக்கும் பதனீர்வரை கொண்டுவா யென்றடிப்பான்**
**விதிக்குகந்த சான்றோர் விரைவாய் கொடுத்திடவே**
**இத்தனையும் வேண்டி இவன் கொண்டு போனாலும்**
**பக்தியுள்ள சான்றோருக்கு படுந்துயர மாறாதே**
**உய்கொண்ட சான்றோர் உடம்புருகும் தேட்டையெல்லாம்**
**நொய்கொண்ட நீசன் நோகப் பறித்தானே**
**இப்படியே சான்றோர் இவர்தேடும் தேட்டையெல்லாம்**
**அப்படியே நீசன் அவன் பறித்துத் தின்றாலும்**
**ஞாயமுள்ள சாணாரின் நாமமது கேட்டவுடன்**
**நீசக்குலத்தோர் வெருட்டி நெடுந்தூரம் கொண்டடிப்பார்**
**குளம்வெட்டச் சொல்லிக் கூலி கொடுக்காமல்**
**களம் பெரியச் சான்றோரை கைக்குட்டை போட்டடிப்பான்**
**சாணார்கள் தன்பனையில் தான்முளைத்த ஓலையெல்லாம்**

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

**வீணாக நீசன் வெட்டித்தா வென்றடித்து**
**வெட்டிக் கொடுத்தாலும் வெற்றியுள்ள சான்றோரை**
**கட்டிச் சுமவெனவே தொகையெண்ணமும் கேட்டு**
**பவந்து மொழிபேசி பணமும் மிகக்கேட்டடிப்பான்**
**ஐயய்யோ சான்றோரை அந்நீசன் செய்ததெல்லாம்**
**வையமது கொள்ளாதே மாதே உன்னோடுரைத்தால்" (அகிலத்திரட்டு, பக். 276)**

இப்படி சான்றோருக்கு இழைத்த கொடுமையை விவரித்து நீள்கிறது அகிலத்திரட்டு. பெண்கள் மேலாடை அணிவதற்கும், பொன் தாலி கட்டிக் கொள்வதற்கும் அனுமதிக்கப் படவில்லை. மீறி அணிந்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். ஆண்கள் இடுப்புக்கு மேலும், முட்டுக்குக் கீழும் ஆடை அணிவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தலைப்பாகைக் கட்டுவது பெருங்குற்றமாகக் கொள்ளப்பட்டது. சுமை சுமப்பதற்கும் கூட தலைப்பாகைக் கட்டுவதற்கு உரிமை வழங்கப்படவில்லை. அதற்கு பதிலாக பனை ஓலையோ, வைக்கோலையோ 'சும்மாடு' என்கிற பெயரில் சுருட்டி வைத்துக் கொள்ளத்தான் அனுமதி இருந்தது.

பொதுக்கிணறுகளில் தண்ணீர் எடுப்பதற்கும், உயர் வகுப்பினராகக் கருதப்பட்டவர்களின் தெருக்களில் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. மேல் ஜாதியினரிடம் பேசுவதற்கு தூர எல்லைகள் வரையறுக்கப் பட்டிருந்தன. வரையறைகளை மீறியவர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டனர். எளியவர்கள் ஊதியம் இல்லாமல் ஊழியம் செய்ய விதிக்கப்பட்டனர். அரசாங்கத்திற்குத் தொடர்புடைய எடுபிடி வேலைகளைச் செய்தனர். உப்பு சுமந்தனர். சாலைகளை அமைத்தனர். குளங்கள் கால்வாய்களை வெட்டினர். மாளிகைகளைக் கட்டினர். சமுதாயத்தில் அடிப்படை நிலையில் இருந்தவர்கள் குடை, செருப்பு போன்றவற்றை பயன்படுத்த முடியாது.

மேல்வர்க்கத்தினரின் குற்றங்களைப் பதிவு செய்ய இயலாது. பதிவு செய்தாலும் பரிகாரம் கிடைக்காது என்கிற நிலையே இருந்தது. ஓடு வேய்ந்த வீடுகளில் வசிப்பதற்கும், பெண்கள் இடுப்பில் தண்ணீர்க்குடம் எடுத்துச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. எளியவர்கள் பயன்படுத்தும் எல்லாப் பொருட்களுக்கும் வரி விதிக்கப்பட்டிருந்தது. அரிவாள், மண்வெட்டி போன்ற கருவிகளுக்கும் வரி செலுத்தினர். அந்த வரியை கம்புத்தடி வைத்திருந்தவர்களும் கட்ட வேண்டியதாயிருந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட வரிகளைச் செலுத்தி நொந்து போயினர் சான்றோர். சமுதாயக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டவர்களை அன்னியர்கள் தங்கள் மதங்களுக்கு பயன்படுத்திக் கொண்டனர். ஏழை மக்கள் அதிகார வர்க்கத்தையும், ஆதிக்க வெறியர்களையும், வஞ்சக வெள்ளையர்களையும் எதிர்த்து போராட வேண்டிய நிலையிலிருந்தனர். ஆனால் ஒடுக்கப்பட்டே உருவாக்கப்பட்டு விட்ட சூழ்நிலையில் அதற்கான திறனின்றி தவித்தனர்.

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

தவிர அறியாமை அவர்களை உழலவைத்தது. வறுமை வாட்டிக் கொண்டிருந்தது. தாழக்கிடந்த மக்களைத் தற்காத்து இந்துச் சமுதாயத்தை மீட்டுக் காக்க வேண்டிய கட்டாயம் இறைவனுக்கு ஏற்பட்டது. அதனால் தான் தனது அம்சமான வைகுண்டரை பூவுலகிலே பிறக்க வைத்து "பொன்னுலகம் காண்பதற்கு" திருமால் திருவுள்ளம் கொண்டார். ஆகவே, பூர்வத்தில் தாயின் வயிற்றிலே அவதரித்து, பௌதிக மகனாய் இவ்வுலகிலே வாழ்ந்தவர், கடலுக்குள் சென்று மகாவிஷ்ணுவின் அம்சமாக - விஷ்ணு அவதாரமாகத் திரும்பி வந்தார். அதை "மறு அவதாரம் கொண்டு வந்தவர் பிறக்கலுற்றார்" என்று அகிலம் கூறுகிறது. அவருடைய அவதாரம் ஜாதியால் பிளவுபட்டுக் கிடந்த மக்களின் மானுட சீர்திருத்தத்திற்கு வகை செய்தது. அய்யாவின் அவதாரம் முதற்கொண்டே சமூக புரட்சி தொடங்கியது.

**அய்யாவின் அவதாரப் புரட்சி**

திருச்செந்தூர் கடலிலே முத்துக்குட்டி சுவாமிகளை மகாவிஷ்ணு ஸ்வீகரித்து ஞான உபதேசம் அளித்தார். "மகனே - நானே நீ ஆனாய். சர்வ பரம் பொருளும் ஆனாய். முன்பு எனக்குத் துணையாக இருந்த பாண்டவர்கள் இந்த அவதாரத்தில் உனக்குத் துணையாக இருப்பார்கள்" என்று அருளினார். கண்ணனாகப் பிறந்து மாயைகள் பல புரிந்த மகாவிஷ்ணு தான் வைகுண்டமாக வந்தார் என்று அகிலத்திரட்டு அம்மானையின் காப்பு பகுதியிலேயே கூறப்பட்டுள்ளது.

**பாண்டவர் தமக்காய்த் தோன்றி**
**பகைதனை முடித்து மாயோன்**
**வீன்றிய கலியன் வந்த**
**விசனத்தால் கயிலை ஏகி**
**சான்றவர் தமக்கா யிந்தத்**
**தரணியில் வந்த ஞாயம்**
**ஆண்டவர் அருளிச் செய்ய**
**அம்மானை எழுத லுற்றேன் சிவமே சிவமே**
**சிவமணியே (அகிலத்திரட்டு, பக். 1)**

என்று அதிலே கூறப்பட்டுள்ளது. எப்போதெல்லாம் அதர்மம் தலை தூக்குகிறதோ அப்போதெல்லாம் தர்மம் காக்க இறைவன் அவதரிக்கிறார். சென்றயுகத்தில் பாண்டவர்களுக்காகப் பிறந்த மாயன், பின்பு கலியின் கொடுமைக்குள்ளான சான்றோர்களுக்காக வைகுண்டமாக அவதரித்தார். அதனை உகப்படிப்பின் தொடக்கவரிகள் இறைவனைப் போற்றி பாடுவதாக அமைந்துள்ளன.

**முன்னுள்ள ராமர் உயிர்க்கும்**
**மோகவடி வான உயிர்க்கும்**

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

**முகச்சையுள்ள ராமர் உயிர்க்கும்**

**இப்போ வந்த நாராயணர் எங்கும் நிறைந்தவர்**

**ஏகமயமானவர்**

**நமக்கு உதவி செய்யவந்த நாராயணர் இவர்தான் (அருள் நூல், பக். 14)**

ராமனுக்கும், கண்ணனுக்கும், பரசுராமருக்கும் காரணமாகியவர் ஸ்ரீமன் நாராயணரே... நமக்கெல்லாம் ஆன்மீக ஒளி புகட்டுவதற்காக அவதாரம் எடுத்த வைகுண்ட சுவாமிகளும் ஸ்ரீமந் நாராயணரே என்று உகப்படிப்பு உபதேசிக்கிறது. இன்றைக்கு "சுவாமிதோப்பு" என்று அழைக்கப்படுகிற பகுதி அன்றைக்கு 'பூவண்டன்தோப்பு' என்று வழங்கப்பட்டு வந்தது. பூவண்டருக்குச் சொந்தமான தோப்பு அங்கே இருந்ததுதான் அதற்குக் காரணம். அய்யா தோன்றியதும் வளர்ந்ததும் அங்குதான். திருவிதாங்கூரின் அதிகாரம் அன்னியருக்குத் தாரை வார்க்கப்பட்டிருந்தாலும் மன்னர் என்கிற ஸ்தானத்தில் சுவாதி மகாராஜா ஆட்சி செய்து கொண்டிருந்தார்.

நாடு அந்நியர்களால் சோதனைக்குள்ளாவதிலான எண்ணம் அவர் மனதிலே இருந்திருக்க வேண்டும். அதனால் 'நமக்கு பகைவராக உள்ளவர் யாராவது இருக்கிறார்களா?" என்று வினவினார். அவ்வாறு யாராவது இருந்தால் நன்றாக விசாரணை செய்து தெளிவான செய்தியை கூறுங்கள் என்று கேட்டுக் கொண்டார். நீசர்களின் கண்களுக்கு இறைவன் புலப்படுவதில்லை. ஆண்டவனே இறங்கி வந்தாலும் அவனை நம்பப் போவதுமில்லை. அன்றைய மந்திரிகள் இந்த வகையிலே இருந்ததால் அய்யாவின் பெயரை காழ்ப்புணர்வில் அறிமுகப்படுத்தினான். "நமக்கு வரி செலுத்தி, ஊழியங்கள் செய்யும் சாணான் குலத்தில் பிறந்த ஒருவன் தாம் வைகுண்டமாக பிறந்து வந்தோம் என்றும், உலகம் முழுவதையும் முடிசூடி ஆள்வோம் என்று பேசுகிறான். பல ஜாதி மக்களையும் ஓரிடத்தில் கூட வைத்து கிணற்று நீரை ஊற்றி நீசர்களை அழிப்பேன் என்றும், சாகாவரம் அளிப்பேன் என்றும் கூறுகிறான்" என்றனர். வழக்கம்போல ராஜா, அய்யாவைக் கொடுமைகள் பல புரிகின்றான். வெடிப்புடங்கால் இடித்து "பனையேறுகின்ற சுபாவம் உனக்கு போகவில்லையே, பனைச்சிரங்கு உன் சரீரத்தில் மாறாமல் இருக்கும் போது நாராயணசுவாமி நான்தான் என்று உளறுகிறாயா? என்று இழித்தும், பழித்தும் பேசினர். அழுக்கும், சிறுநீரும், புழுக்களும் நிறைந்த டாணாப்புரையில் அடைத்தனர்.

**சான்றோருக்காகத் தருமக் குருநாதன்**

**மீன்று முழியாமல் முகமலர்ந்தங்கியிருந்தார் (அகிலத்திரட்டு, பக். 216)**

என்கிறது அகிலம்.

பட்டினி போட்ட கடுவாயை அய்யாமீது ஏவினர். வைகுண்டரின் காந்தக் கண்களின் காந்தப் பார்வையில் மயங்கிக்கிடந்தன புலி.

**தைசெய்யவிட்ட புலி அதிசயப்பட்டு என்னை**

**வணங்கியும் நின்றதையோ சிவனே அய்யா (அருள் நூல், பக். 44)**

என்கிறது அருள்நூல். புலிக்கு கோபமூட்ட வேண்டும் என்று புலி மேல் எறிந்த ஈட்டி அருகில் நின்ற வேதியன் மீது பட்டு அவர் உயிரைக் குடித்து விட்டது. ஒரு வேதியரைக் கொன்ற பாவத்திற்கு வேந்தன் ஆளாகிவிட்டார். இனி அவருக்கு வைகுண்டரை விடுதலை செய்ய வேண்டும் என்கிற சூழல் வந்துவிட்டது. நாவுக்கரசரை கொல்ல வந்த யானைகள் எப்படி ஏவியவர்களையே கொன்றதோ அப்படியே ஆகிவிட்டது இந்த சம்பவம்.

**சமுதாய மாற்றத்திற்கான அய்யா செய்த புரட்சி:**

அய்யா வைகுண்டர் புகட்டிய நீதியும் தத்துவமும் தான் சைவ, வைணவ சங்கமம் ஆகும். வைணவ அடையாளமான திருநாமத்தை நெற்றியில் இட்டுக் கொண்டு சிவபெருமானுடைய நாமத்தைக் கூறி புதுமையான வழிபாட்டு முறையைப் புகுத்தினார் அய்யா.

"அய்யா சிவசிவ சிவசிவா அரகர அரகரா!" என்கிற ஒரே மந்திரத்தில் சிவனை உள்ளடக்கினார். தமது சீடர்களை காவி ஆடை அணிவதற்குப் பணித்தார். சிவனுக்குரிய ருத்ராட்ச மாலையையும், விஷ்ணுவுக்குரிய துளசி மாலையையும் அணிந்து கொள்ள அறிவுறுத்தினார். அகிலத்திரட்டில் "சதாசிவம் வைகுண்டமாச்சே" என்றொரு வரி இடம் பெறுகிறது. சதாசிவம் என்பது சிவபெருமானின் அருளும் சக்தி. அனைத்து திசைகளிலும் வியாபித்து அனைத்துமாக இருப்பது அது. அதாவது விஷ்ணுவின் அம்சத்தில் சிவன் சக்தி. விஷ்ணு என்பது பருவுடல், சிவன் என்பது ஜீவன். இந்த இரண்டு மூர்த்திகளின் ஒன்றுபட்ட அவதாரமே அய்யா. சிவபெருமானின் தத்துவமாகவும் தாம் இருந்த காரணத்தாலே, "எடுத்தேன் ஒரு கோலம், இறங்கி வந்தேன் கைலாசம்" என்று அய்யா கூறினார். உலகம் பெண்ணுக்கு எந்தவித அங்கீகாரத்தையும் அளிப்பதற்கு முன்பே சிவபெருமான் தம்மில் சரிபாதியை சக்திக்கு விருந்தளித்தார். அந்த அர்த்தநாரீஸ்வர தத்துவமே தாம் என்பதையும் கூறினார் அய்யா.

**கைலாசம் தனிலிருந்து பல**

**காரணங்கள் முழக்க வந்தேன்**

**ஆணானேன், பெண்ணானேன்**

**அடங்காத சொரூபமானேன் (அருள் நூல். பக். 14)**

என்றார். நீசர்கள் வைகுண்டரைத் துன்புறுத்தியபோது "தம்மைக் கந்தன் என்று அறியாதவர்கள்" என்று அவர்களைப் பற்றிக் கூறினார். அய்யாவின் அருள்நூல் சிவபெருமானைப் போற்றுகிறது

**சிவ சிவா அரிகுரு சிவசிவா**

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

**சிவ சிவா ஆதிகுரு சிவசிவா**
**மூலகுரு சிவசிவா சிவசிவா சிவமண்டலம்**

என்று உச்சிப்படிப்பு தொடங்குகிறது.

**நாதன் குருநாதனே, சிவசிவா சிவமண்டலம்**
**பரலோகம் அளந்த பச்சைமால் நாராயணரே**
**சிவசிவா சிவமண்டலம்**
**மகாகுரு சிவசிவா சிவகுரு மண்டலம்**
**சிவசிவா எங்கும் நிறைந்தவர்**
**ஏகமாய் நின்றவர் அவர் சிவசிவா**
**சிவசிவா சந்நியாசி செந்தில்வேல் அவர்**
**வடிவும் புகழ் படைத்தவரே மாயநிறமானவர்**
**அவர் சிவசிவா (அருள் நூல், பக். 10)**

இறுதியில் சிவலிங்கங்களின் வடிவங்கள் கூறப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லி கோயிலுக்குள் செல்ல தடை விதித்தார்களோ அய்யா தன் மக்களுக்கு என்றே தனி ஒரு வழிபாட்டு முறையையே உருவாக்கி புரட்சி செய்ததைப் பார்த்தீர்களா? அது மட்டுமா என் மக்கள் திருமணம் தனியாக புகழ் பெறவேண்டும் என்று கல்யாண வாழ்த்து பாடினார். அந்தத் திருமணங்களுக்குக் குருவாக சிவபெருமானையும், முன்னிலை வகிப்பவராக திருமாலையும் அகிலத்திரட்டில் காட்சிப்படுத்தினார். "சிவனே குருவான திருமேனி என்று போற்றுகிறார்".

**ஆணுடன் பெண்ணும் பெற்று**
**அதிகமாய்ச் செல்வ மாகித்**
**தாணுட நினைவும் உற்று**
**தர்மமும் நெறியும் கற்று**
**வேணும்நீள் காலம் எல்லாம்**
**மெல்லியர் உடனே வாழ்ந்து**
**பூணுதல் கமல நாதன்**
**பொற்பாதம் பெற்று வாழ்வீர்! (அகிலத்திரட்டு, பக். 466)**

என்றும், திருமண வைபவத்தின் உச்சக்கட்ட நிகழ்ச்சியை குறிப்பிடும் கல்யாண வாழ்த்தில்,

**அரகரா வென்று அம்மையுமை தானெழுந்து**
**சிவசிவா வென்று திருச்சரடு சேர்த்தனரே (அருள் நூல், பக். 170)**

என்றும் வாழ்த்துகிறார். தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டவர்கள் இல்லங்களில் தமது சீடர்களை உணவு அருந்துவதற்கு அனுப்பி வைத்தார்.

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

தன்னை நாடி வந்த அனைவருக்கும் முத்திரிக் கிணற்றில் தீர்த்தம் தந்து தொட்டு நாமம் சாற்றினார். சமபந்தி விருந்தில் ஒரு புதுமையைப் புகுத்தினார். அவரவர் வீடுகளிலிருந்து காய்கறிகளை கொண்டு வந்து ஒன்றாக்கி கலந்து சமைத்து உண்பது என்பதே அது.

"பிச்சையெடுத்து மிச்சமில்லாமல் கொடுக்கப் பணித்தார்" வற்றாத புனித ஊற்றாக விளங்கும் முத்திரிக் கிணற்றையும் கூறவேண்டும். குளம் கிணறு வெட்டுவது இன்றைக்கு சாதாரணமாக இருக்கலாம். ஆனால் அவற்றை எட்டிப் பார்க்கக் கூட உரிமை இல்லாத காலத்தில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது அதிசயமானது. அந்த அதிசயத்தை நிகழ்த்திக் காட்டியவர் அய்யா வைகுண்டர். எளியவர்களின் வழிபாடுகளில் மந்திரங்களை எதிர்பார்க்க முடியாது. அந்த மந்திரங்கள் சமஸ்கிருதத்தில் வேறு இருந்தன. அவற்றையெல்லாம் கற்கும் நிலையில் அவர்களும் இல்லை. அதற்கான வாய்ப்புகளும் இல்லை. அந்த குறையைக் களைவதற்காகவே அய்யா "உகப்படிப்பு, உச்சிப்படிப்பு" என்கிற மகா மந்திரங்களை அறிமுகப்படுத்தினான்.

**அவரவர் தேடும் முதல் அவரவர்**
**வைத்து ஆண்டிடுங்கோ (அகிலத்திரட்டு, பக். 283)**

ஆடுகிடாய், கோழி, பன்றி ஆயனுக்கு வேண்டாம்காண். மேளதாளம் குரவைதொனி வேண்டாம் காணீசனுக்கு ஒரு அன்பு மலரெடுத்து அனுதினமும் பூஜை செய்வாய்.

**"பிச்சி வெள்ளை பச்சரிசி மிளகிலை தேங்காயும்**
**மிச்சம்பழம் சந்தனமும் மிகுபன்னீர் வாடைகளும்"**

என்று எளியவற்றைப் படைக்கும் உள்ளம் உடையோரைத் தடுக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அடிமைகளாக வாழ்ந்த மக்கள் அழுக்குத் துணிகளையே அணிந்திருந்தனர் என்பது வினோதமானதல்ல. ஆகவே அவரது அன்பர்களை தினமும் மூன்று வேளை ஆடைகளை துவைத்து அணிந்துகொள்ள அறிவுறுத்தினார். அது வெறும் ஆடைகளை மாத்திரம் துவைப்பதற்கான பயிற்சி அல்ல. உள்ளத்தையும் பக்குவப்படுத்துவதற்கான முயற்சி. அந்த தவத்தின் பயனால் எந்தச் சமுதாயத்தில் புழுவினும் கீழாக இழிவு படுத்தப்பட்டார்களோ அதே சமுதாயத்தில் அவர்கள் 'சுவாமி' என்று அழைக்கப்பட்டனர்.

**முடிவுரை**

அய்யா வைகுண்டர் மக்களையெல்லாம் அன்பென்னும் ஒரு குடைக்குள் கொண்டு வர காவி நிறத்தில் நடுவில் வெள்ளை நிற ஒற்றை நாமம் கொண்ட அன்புக் கொடியை உருவாக்கினார். 'அழகான உள்ளம் தான் எனக்கு கோவில்' என்றார். 'சத்தியத்தில் குடியிருந்தால் சாமி நான் துணையிருப்பேன்' என்றார். அவரது அவதார காலத்தில் இந்தச் சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட கொடுமைகளையும், பாரபட்சங்களையும் களைய தீவிரமாகப் போராடினார். இறைவனை அடைவதே மனிதனின் இறுதி லட்சியம். அந்த

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

லட்சியத்திற்கு அன்பே அடிப்படையாக இருக்க வேண்டும் என்கிற காரணத்தால் உயிர்ப் பலியிடுவதை வெறுத்தார். அய்யாவின் சமூகப் புரட்சி உயிர்களுக்குள் ஒரு அற்புத எழுச்சி.

**அய்யா உண்டு !**

**துணைநூற்பட்டியல்**

[1] நா. விவேகானந்தன். *அய்யா வைகுண்டர் அகிலத்திரட்டு அம்மானை.* விவேகானந்தா பதிப்பகம், நாகர்கோயில்.

[2] நா. விவேகானந்தன். *அருள் நூல் மூலமும் உரையும்.* விவேகானந்தாபதிப்பகம், நாகர்கோவில் 4.

[3] வெ.நீலகண்டன். *அய்யா வைகுண்டர்.* விகடன் பிரசுரம், 2009.

[4] மாருதி பிரியன். *ஆன்மீக மார்க்கம்.* சிவா ஆப்செட், பருத்தி காட்டு விளை, திருவிதாங்கோடு.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.